மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோயில் என்ன இவ்வளவு பெரிய தடுமாற்றம் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இருதய நோய் சிகிச்சைக்கு அதிகமான செலவில்லை என்ற தவறான குறிப்பைக் கொடுக்கிறார்கள். அதை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால், முதலிலே, ஐ.சி.சி. யூனிட்டை ஆரம்பித்து, அதற்குப் பிறகுதான் அதை வளர்ப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அவர்களுடைய மாவட்டத் தலைநகரம் திண்டுக்கல்லாக இருக்குமானால், அந்தத் திண்டுக் கல்லிலே, மாவட்டத் தலைநகரத்திலே ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

*5913 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு உலக வங்கியின் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலமாக குடிநீர் வழங்கும் திட்டம் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

9–55 மணி

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91-ல் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப் படுவதாக அமைச்சரவர்கள் குடிநீர் வழங்குகின்ற ஆலோசனை கூட்டத்தில் சொல்லப்பட்டது அதையொட்டி அமைச்சரவர்கள் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இப்பேரூராட்சியின் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்துவதற்காக

சுமார் ரூ. 62 இலட்சம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே அரசினுடைய நிதிநிலை குறித்து இந்த ஆண்டு அதை செயல் திட்டத்திலே சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை எடுத்துக்கொள்கிறபோது அதை ஒட்டினாற்போலுள்ள சித்தூர், வெள்ளிரிவள்ளி, ஆடையூர், இடுப்பாலை போன்ற ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 8338 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம்

*3367—திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரத்தில் கோழி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாட்டம் ராசிபுரம் வட்டாரத்தில் பொதுமக்கள் கோழிப் பண்ணைகளை வைத்து குடிசைத் தொழிலாக நடத்திக் கொண்டு பயனடைந்து வருகிறார்கள். சில நேரங்களில் திடீரென்று கோழிகளுக்கு நோய் வந்து அவை